IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.S. No. 248/2021

சாட்சி : PW1

பெயர் : சரவணன் தேதி: 23-11-2023

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

பிரதிவாதிக்கு 70 க்கு மேல் வயதாகிறது. பிரதிவாதிக்கு 3 மகன்கள். அவர்களில் முருகன் மற்றும் முத்துவை, எனக்கு தெரியும். அவர்களுடன் எனக்கு பழக்கம் இல்லை. பிரதிவாதி தான் என்னிடம் பணம் வாங்கிக் கொண்டார் என்றால் ஆமாம். பணம் எதற்காக தேவை என்று பிரதிவாதி என்னிடம் எதுவும் கூறவில்லை. தாவா சொத்து பிரதிவாதியின் வீடும், அதை ஒட்டியுள்ள காலி நிலமும் என்றால் ஆமாம். பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதில் வழக்குரையில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதற்கு மறுப்பு தெரிவித்து நான் பதில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். அதிலுள்ள விவரங்கள் சரியானது என்றால் ஆமாம். முருகன் மற்றும் முத்து ஆகியோர்கள் தான் என்னிடம் கடன் வாங்கினார்கள் என்றும், அவர்கள் வாங்கிய கடனுக்காக பிரதிவாதி இடத்தின் உரிமையாளர் என்பதால் அவரிடம் எழுதப்படாத 20 ரூபாய் முத்திரைத்தால் மற்றும் பச்சை தாள்கள் மற்றும் புரோநோட்டில் அவருடைய கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டு அதை பூர்த்தி செய்து இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2017 ம் வருடம் கடன் வாங்கி 2020 ம் வருடம் வரை அவர்கள் வட்டிக் கட்டியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அதன் பின்னிட்டு, கொரோனா காலக்கட்டத்தில் அவர்களால் வட்டி செலுத்த இயலாததால், நான் வெற்று ஆவணங்களை பூர்த்தி செய்து, இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ரூ.

8,00,000/- கையில் சேமித்து வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். அந்த தொகையை வங்கிக் கணக்கில் வைத்திருக்கவில்லை. அந்த தொகையை வருமான வரிக் கணக்கில் காட்டவில்லை. 100 ரூபாய் நோட்டுக்களாக கொடுத்தேன். சீலநாய்க்கன்பட்டியில் பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். அப்போது அங்கு பத்திர தட்டச்சர் சதீஸ், லோகநாதன், ராஜா, சுபாஷ், மகாலட்சுமி மற்றும் அவரது மகன் முருகன் இருந்தார்கள். சுமார் 12.00 மணியளவில் பணம் கொடுத்தேன். அந்த சமயத்தில் அரசு லாக் டவுன் போடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அப்போது கூட்டமாக சேரக்கூடாது என்று தடை விதித்திருந்தது என்றால் ஆமாம். நான் கூறுவது போல் எந்த விதமான பரிவர்த்தனையும் நடைபெறாமல், ஆவணங்களை ஜோடித்து பொய் வழக்கு போட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/- A.M. ரவி,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.